# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8035 290

1. District : மாவட்டம் வேலூர் | PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு | Year: ஆண்டு 2017 | FIR No.: மு.த.அ. எண் 12/17 | Date: நாள் 18-11-2017.

2. (I) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: ஊழல் தடுப்பு சட்டம் 1988 பிரிவு Sections பிரிவுகள்: 7 of PC ACT 1988
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 08-11-2017 | Date to : நாள் வரை 14-11-2017.
Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 15-11-2017 | Time : நேரம் 1100 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம்

4. Type of Information : Written/Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக ✓ எழுத்து மூலமாக.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 40km வடகிழக்கு.
Beat Number : முறைக் காவல் எண் — | (b) Address : முகவரி மின்சார வாரிய அலுவலகம் காவனூர், அரக்கோணம் தாலுக்கா, வேலூர் மாவட்டம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் K. புவனேஸ்வரி | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் கார்த்திகேயன்.
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 25/17. | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் — | (g) Address : முகவரி N/O: 117, எம்.ஜி.ஆர் தெரு, புலியமங்கலம் கிராமம், அரக்கோணம் தாலுக்கா வேலூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. ரவிகுமார், வணிக ஆய்வாளர் (Commercial Inspector) காவனூர் மின்சார வாரிய அலுவலகம், அரக்கோணம் தாலுக்கா, வேலூர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித் தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

K. புவனேஸ்வரி

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 18/11/2017

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

18-11-2017 at 11.30hrs.

Name: பெயர் மு. [illegible]
Rank: நிலை ......................No. எண் .........
காவல் ஆய்வாளர்
உணவு கடத்தல் மற்றும் கண்காணிப்பு பிரிவு
வேலூர்.

* GCP-240-34(Type 2) 90,000 Cps 21.3.16(HCL-12)p.2

பணிந்து அனுப்பப்படுகிறது: வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் P.விஜயலட்சுமி ஆகிய நான் 15.11.2017-ம் தேதி காலை 11.00 மணிக்கு அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது, புகார்தாரர் திருமதி.K.புவனேஸ்வரி, வயது.25/2017, க/பெ.கார்த்திகேயன், எண்.117, எம.ஜி.ஆர். தெரு, புங்கனூர் கிராமம், ஆற்காடு தாலுக்கா, வேலூர் மாவட்டம் என்பவர் நேரில் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று பார்க்க, தான் ஆற்காடு தாலுக்கா, புங்கனூர் கிராமத்தில் தனது கணவர் குடும்பத்தினருடன் கூட்டு குடும்பமாக இருந்து வருகிறேன் என்றும், தன் கணவர் கார்த்திகேயன் சென்னை வள்ளுவர் கோட்டம் பகுதியில் உள்ள வீட்டில் இருதய நோயாளிக்கு உதவி செய்யும் வேலை செய்து கொண்டிருக்கிறார் என்றும், தங்கள் ஊரில் தனது மாமனார் பலராமன் பெயரில் எம்.ஜி.ஆர் 2-வது தெருவில் அரசால் இலவசமாக வழங்கப்பட்ட காலி மனை சர்வே எண். 71/1B, 72/1B, 73/1A -ல் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு எனது கணவர் புதிய சிமெண்ட் ஷீட் வீடு ஒன்றை கட்டினார் என்றும், அந்த வீட்டிற்கு புதிய சிங்கிள் பேஸ் மின் இணைப்பு பெறுவதற்காக கடந்த 7.11.2017 அன்று காவனூர் EB அலுவலகத்திற்கு சென்று கமர்ஷியல் இன்ஸ்பெக்டர் திரு.நந்தகுமார் அவர்களை சந்தித்து மனு கொடுத்ததாகவும், அந்த மனுவை பெற்று கொண்டு திரு.நந்தகுமார் அவர்கள் மறுநாள் 8.11.2017-ந்தேதி வீட்டினை நேரில் வந்து பார்த்து மின் இணைப்பிற்காக மொத்தமாக ரூ.3,300/- கட்ட சொன்னார் என்றும், அதற்கு தான் அவரிடம் டெபாசிட் தொகை ரூ.1,600/- தானே என்று கேட்டதாகவும், அதற்கு அவர் டெபாசிட் பணம் ரூ.1,600/- தான், ஆனால் நாங்கள் வந்து போகும் செலவெல்லாம் சேர்த்து ரூ.3,300/- ஆகும் என்று சொன்னதாகவும், அதற்கு தான் தற்போது தன்னிடம் பணம் இல்லை என்றும் பணத்தை ரெடி செய்து கொண்டு வருகிறேன் என்று சொன்னதால், அவர் அங்கிருந்து சென்றுவிட்டு, மீண்டும் அன்று மாலையே திரு. நந்தகுமார் அவர்கள் தன் வீட்டிற்கு வந்து, நான் கேட்ட பணம் ரெடியாக உள்ளதா என்று என்னிடம் கேட்டதாகவும், அதற்கு தான் தன்னிடம் பணம் ரூ.1,600/- தான் உள்ளது என்று சொன்னதாகவும், அதற்கு திரு. நந்தகுமார் அவர்கள் அக்கம் பக்கத்தில் ஏதாவது பணம் ரெடி செய்து மொத்தமாக பணம் ரூ.3,300/-ஐ கொடுங்கள் என்று சொல்லிவிட்டு போய்விட்டதாகவும், மீண்டும் தான் நேற்று 14.11.2017-ந்தேதி காலை சுமார் 11.00 மணியளவில், காவனூர் மின் வாரிய அலுவலகத்திற்கு சென்று, திரு. நந்தகுமார் அவர்களை பார்த்து மின் இணைப்பு சம்மந்தமாக கேட்டபோது, அவர் பணம் ரூ.3,300/-யை கொடுத்தால் மட்டும்தான் மின் இணைப்பு கொடுக்க முடியும், நான் கேட்ட பணத்துடன் வந்து என்னை பாருங்கள் என்று உறுதியாக சொன்னதாகவும், தான் தனது வீட்டின் புதிய மின் இணைப்பிற்காக மின்சார வாரியம் குறிப்பிட்ட பணத்தை கட்டுகிறேன் என்று சொன்ன பிறகும், அதற்கும் கூடுதலாக ரூ.1,700/- லஞ்சமாக கேட்கும் பணத்தை கமர்ஷியல் இன்ஸ்பெக்டர் திரு.நந்தகுமாருக்கு கொடுக்க எனக்கு விருப்பமில்லை. எனவே, காவனூர் மின்சார வாரியத்தில் பணிபுரியும் லஞ்ச பணம் கேட்ட கமர்ஷியல் இன்ஸ்பெக்டர் திரு.நந்தகுமார் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன் என்று தனது புகார் மனுவில் தெரிவித்திருந்தார். அதன்படி மேற்படி

புகார் மனுவின் நகலை இயக்குநர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டதின்பேரில், சென்னை இயக்குநரக உத்தரவுப்படி PE 383/2017/TANGEDCO/VL நாள்.15.11.2017-ந் தேதி 19.00 மணிக்கு பதிவு செய்யப்பட்டு, முதற்கட்ட விசாரணை மேற்கொள்ளப்பட்டது. முதற்கட்ட விசாரணையின் தொடர்ச்சியாக, 15.11.2017-ம் தேதி என்னுடைய தகவலாளர்களை தொடர்பு கொண்டும் நேரில் சந்தித்து எதிரியின் நடத்தை குறித்து விசாரணை செய்ததில் எதிரியானவர் அவர் செய்ய வேண்டிய பணிகளுக்காகவும், அவரின் வரம்பிற்குட்படாத செயல்களை செய்வதற்காகவும், பொது மக்களிடம் புதிய மின் இணைப்புகளை கொடுப்பதற்காகவும் மற்றும் பிற பணிகளுக்காக லஞ்சமாக பணம் பெறுவதும் உறுதி செய்யப்பட்டது. எனவே, எதிரி திரு. நந்தகுமார், கமர்ஷியல் இன்ஸ்பெக்டர், TANGEDCO, காவனூர், ஆற்காடு தாலுக்கா, வேலூர் மாவட்டம் என்பவர் மீது 1988 வருட ஊழல் தடுப்பு சட்ட பிரிவு 7-ன் கீழ் வழக்கு பதிவுச் செய்ய முகாந்திரம் இருந்தமையால், சென்னை இயக்குநரக அனுமதிப் பெற்று, திருமதி. K. புவனேஸ்வரி என்பவர் கொடுத்த புகார் மனுவின் பேரில், இன்று 18.11.2017-ம் தேதி காலை 11.00 மணிக்கு வேலூர் விழிப்பு மற்றும் ஊழல் தடுப்புப் பிரிவு குற்ற எண்.12/2017 சட்ட பிரிவு 7 ஊழல் தடுப்புச் சட்டம், 1988-ன் கீழ் திரு. நந்தகுமார், கமர்ஷியல் இன்ஸ்பெக்டர், TANGEDCO, காவனூர், ஆற்காடு தாலுக்கா, வேலூர் மாவட்டம் என்பவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகார்தாரர் திருமதி.K.புவனேஸ்வரி, வயது.25/2017, க/பெ.கார்த்திகேயன், எண்.117, எம்.ஜி.ஆர். தெரு, புங்கனூர் கிராமம், ஆற்காடு தாலுக்கா, வேலூர் மாவட்டம் என்பவர் கொடுத்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு: விடுநர் 15.11.2017 K. புவனேஸ்வரி, க/பெ. கார்த்திகேயன், 117, எம்.ஜி.ஆர். தெரு, புங்கனூர் கிராமம், ஆற்காடு தாலுக்கா, வேலூர் மாவட்டம். பெறுநர் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, வேலூர். ஐயா, நான் ஆற்காடு தாலுக்கா, புங்கனூர் கிராமத்தில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு கடந்த 2012-ம் ஆண்டு திருமணமாகி, எனது கணவர் குடும்பத்தினருடன் கூட்டு குடும்பமாக இருந்து வருகிறேன். எனக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். என் கணவர் கார்த்திகேயன் சென்னை வள்ளுவர் கோட்டம் பகுதியில் உள்ள வீட்டில் இருதய நோயாளிக்கு உதவி செய்யும் வேலை செய்து கொண்டிருக்கிறார். அவர் பத்தாயிரம் ரூபாய் சம்பளம் வாங்குகிறார். எங்கள் ஊரில் எனது மாமனார் பலராமன் பெயரில் எம்.ஜி.ஆர் 2வது தெருவில் அரசால் இலவசமாக வழங்கப்பட்ட காலி மனை சர்வே எண். 71/1B, 72/1B, 73/1A -ல் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு எனது கணவர் புதிய சிமெண்ட் ஷீட் வீடு ஒன்றை கட்டினார். அந்த வீட்டிற்கு புதிய சிங்கிள் பேஸ் மின் இணைப்பு பெறுவதற்காக கடந்த 7.11.2017 அன்று காவனூரில் உள்ள EB அலுவலகத்திற்கு சென்று அங்கு அலுவலகத்தில் இருந்த கமர்ஷியல் இன்ஸ்பெக்டர் திரு.நந்தகுமார் அவர்களை சந்தித்து மனு ஒன்றை கொடுத்தேன். அந்த மனுவுடன் வீட்டு பத்திரம் நகல், வீட்டு வரி ரசீது, VAO சான்று ஆகியவற்றை இணைத்து கொடுத்தேன். அந்த மனுவை பெற்று கொண்டு திரு.நந்தகுமார் அவர்கள் மறுநாள் 8.11.2017 –ந்தேதி வீட்டினை நேரில் வந்து பார்த்து மின்

இணைப்பு கொடுப்பதாக கூறினார். அவர் சொன்னதுபோலவே 8.11.2017-ந் தேதி கமர்ஷியல் இன்ஸ்பெக்டர் திரு. நந்தகுமார் அவர்கள் நாங்கள் புதியதாக கட்டிய வீட்டினை வந்து பார்த்தார். பின்னர் மின் இணைப்பிற்காக மொத்தமாக ரூ.3,300/- கட்ட சொன்னார். அதற்கு நான் அவரிடம் டெபாசிட் தொகை ரூ.1,600/- தானே என்று கேட்டேன். அதற்கு அவர் டெபாசிட் பணம் ரூ.1,600/- தான் ஆனால் நாங்கள் வந்து போகும் செலவெல்லாம் சேர்த்து ரூ.3,300/- ஆகும் என்று சொன்னார். அதற்கு நான் தற்போது என்னிடம் பணம் இல்லை என்றும் பணத்தை ரெடி செய்து கொண்டு வருகிறேன் என்று சொன்னதால், அவர் அங்கிருந்து சென்றுவிட்டார். அன்று மாலையே மீண்டும் திரு. நந்தகுமார் அவர்கள் என் வீட்டிற்கு வந்து, நான் கேட்ட பணம் ரெடியாக உள்ளதா என்று என்னிடம் கேட்டார். அதற்கு நான் என்னிடம் பணம் ரூ.1,600/- தான் உள்ளது என்று சொன்னேன். அதற்கு திரு. நந்தகுமார் அவர்கள் அக்கம் பக்கத்தில் ஏதாவது பணம் ரெடி செய்து மொத்தமாக பணம் ரூ.3,300/-ஐ கொடுங்கள் என்று சொல்லிவிட்டு போய்விட்டார். மீண்டும் நான் நேற்று 14.11.2017-ந்தேதி காலை சுமார் 11.00 மணியளவில், காவனூர் மின் வாரிய அலுவலகத்திற்கு சென்று, கமர்ஷியல் இன்ஸ்பெக்டர் திரு. நந்தகுமார் அவர்களை பார்த்து மின் இணைப்பு சம்மந்தமாக கேட்டபோது, அவர் பணம் ரூ.3,300/-யை கொடுத்தால் மட்டும்தான் மின் இணைப்பு கொடுக்க முடியும், நான் கேட்ட பணத்துடன் வந்து என்னை பாருங்கள் என்று உறுதியாக சொன்னார். நான் எனது வீட்டின் புதிய மின் இணைப்பிற்காக மின்சார வாரியம் குறிப்பிட்ட பணத்தை கட்டுகிறேன் என்று சொன்ன பிறகும், அதற்கும் கூடுதலாக ரூ.1,700/- லஞ்சமாக கேட்கும் பணத்தை கமர்ஷியல் இன்ஸ்பெக்டர் திரு.நந்தகுமாருக்கு கொடுக்க எனக்கு விருப்பமில்லை. எனவே, காவனூர் மின்சார வாரியத்தில் பணிபுரியும் லஞ்ச பணம் கேட்ட கமர்ஷியல் இன்ஸ்பெக்டர் திரு.நந்தகுமார் அவர்கள் மீது சட்டபடி நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இத்துடன் நான் என்னுடைய வீட்டு பத்திரம் நகல், வீட்டு வரி ரசீது நகல், VAO சான்று நகல் ஆகியவற்றை இணைத்துள்ளேன். இப்படிக்கு, (SD/XXX) K.புவனேஸ்வரி.

Sir,

i. Received the complaint on 15.11.2017 at 11.00 hrs., and the same was forwarded to the Directorate of Vigilance and Anti-Corruption, Chennai on 15.11.2017 at 11.30 hrs. Sd/-xxxxx P.Vijayalakshmi, 15.11.2017 Inspector of Police/V&AC/VLR.

ii. On the order of DVAC, Chennai, A Preliminary Enquiry in PE 383/2017/TANGEDCO/VL, dt.15.11.2017 was registered, on 15.11.2017 at 19.00 hrs. Sd/-xxxxx P.Vijayalakshmi, 15.11.2017 Inspr./V&AC/VLR.

iii. On the outcome of the preliminary enquiry and after obtaining concurrence from DVAC, Chennai a case in Vigilance and Anti-Corruption, Vellore Detachment Cr. No. 12/2017, u/s. 7 of P.C.Act-1988 was registered on 18.11.2017 at 11.00 hrs. Sd/-xxxxx P.Vijayalakshmi, 18.11.2017 Inspr./V&AC/VLR.

பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல், வாதியின் புகார் மற்றும் அவருடைய வீட்டு வரி ரசீது நகல், V.A.O. சான்று நகல் மற்றும் திருத்திய மனை பட்டா ஆகியவற்றை கனம் முதன்மை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, வேலூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பிக் கொள்ளப்பட்டது.

18/11/17

Inspr. of Police
V&AC, Vellore.